**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No. 172/2017 | Date | : | 30.01.2026 |
| Deposition of Witness for | : | **அ.சா**. 9 | Taluk | : | |
| Name | : | **சுரேஷ்குமார்** | Calling | : | |
| Father Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 30.01.2026

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் காவல் துறையில் காவல்துறை துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து, 2017 ஆம் வருடம் ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 05.10.2009 ஆம் தேதி நான் ஈரோடு மாநகர நகர உட்கோட்டத்தில் மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்தேன். எனக்கு முன்னால் ஈரோடு நகர உட்கோட்ட துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்த தனபால் என்பவர் ஈரோடு தெற்கு காவல் நிலைய குற்ற எண். 213/2009 சட்டப்பிரிவுகள் 147, 365, 323, 506(2) IPC & 3(1) SC/ST சட்டம் 1989 கீழ் வழக்கை புலன்விசாரணை செய்து அதனுடைய அறிக்கையை மாவட்ட விழி கண் குழுவிற்கு அனுப்பி வைத்திருந்தார். அவருக்கு பின்னால் பணிப்பொறுப்பேற்ற நான் மாவட்ட ஆட்சியர் மறுவிசாரணை செய்ய வேண்டி உத்தரவிட்டதன்பேரில் நான் இவ்வழக்கை மறுபுலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் நேருவிவேகானந்தன், பால்ராஜ், நாகராஜ், சாந்தி, பாக்கியம்மாள், மலர், செல்வி, பாலு, தங்கவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. எனது மறுப்புலன் விசாரணையில் சாட்சி நேரு விவேகானந்தர் கூறும் பணம், இடம் சம்பந்தமான பிரச்சனை முற்றிலும் சிவில் விவகாரம் என்றும், கிரிமினல் நடவடிக்கை தொடரக்கூடிய நிகழ்வுகள் எதுவும் இல்லை என தெரிய வந்தது. அவர் சிவில் நீதிமன்றத்தை நாடாமல் தான் இழந்த வீட்டை மீண்டும் திரும்ப பெற வேண்டி கடன் கொடுத்தவர் தன் மீதுள்ள பிடி கட்டளையை நிறைவேற்றாமல் இருக்க வேண்டி பால்ராஜ் போன்றவர்களிடம் யோசனை கேட்டு அதற்கு ஒரே ஆயுதமாக இந்த சட்டப்பிரிவினை தனக்கு சாதகமாக பயன்படுத்தி உண்மைக்கு புறம்பான முறையில் புகார் கொடுத்துள்ளதாக எனது விசாரணையில் தெரியவந்தது.

3. எதிரி செல்வராஜ், நேரு விவேகானந்தனுக்கு ஆவணமாகவோ அல்லது ஆதாரபூர்வமாகவோ, பணப் பரிமாற்றமோ அல்லது வேறு எந்த நிகழ்வுகளோ எதுவும் இல்லை என்று விசாரணையில் தெரியவந்தது. சாட்சி நேரு விவேகானந்தர் எதிரி செல்வராஜ் சம்பந்தமான எந்த ஆவணத்தையும், ஆதாரத்தையும் தாக்கல் செய்யவில்லை. அவர் கூறும் குற்றச்சாட்டுக்கு அவரிடத்தில் எந்த ஆதாரமும், சாட்சியும் இல்லை. இந்த வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்த சிறப்பு அரசு வழக்கறிஞர் சிவக்குமார் அவர்களும், பொருண்மையில் பிழை உடையதாக கருதி மேல்நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்றும், இவ்வழக்கை கைவிடலாம் என்று கூறி கருத்துரை வழங்கினார்.

4. அதேபோல் நானும் எனது விசாரணையை முடித்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஈரோடு அவர்களுக்கு 05.04.2010 ஆம் தேதி எனது அறிக்கையை மாவட்ட ஆட்சியரின் விழி கண் குழுவிற்கு அனுப்ப வேண்டி அனுப்பி வைத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அறிக்கை நான் வழங்கியதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(05.04.2010 ஆம் தேதியிட்ட அறிக்கை அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை, எனவே எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.01.30 17:46:53 -0800

Judicial Magistrate No.III,

Erode.